**அல்லாஹ்வின் கட்டளை**

وَلَا يَحْسَبَنَّ الَّذِيْنَ كَفَرُوْٓا اَنَّمَا نُمْلِيْ لَهُمْ خَيْرٌ لِّاَنْفُسِهِمْ ؕ اِنَّمَا نُمْلِيْ لَهُمْ لِيَزْدَادُوْٓا اِثْمًا ۚ وَلَهُمْ عَذَابٌ مُّهِيْنٌ ○

நிராகரிப்பவர்களை நாம் விட்டு வைப்பது, அவர்களுக்கு நன்றென்று அவர்கள் ஒருபோதும் கருத வேண்டாம். நாம் அவர்களை விட்டு வைக்கின்றோம் (என்றால்) அதன் விளைவு அவர்கள் (தங்கள்) பாவங்களில்முன்னேறுவதேயாகும். அவர்களுக்கு இழிவுபடுத்தும் ஆக்கினை (விதிக்கப்பட்டு) உள்ளது. (3:179)


بسم الله الرحمن الرحيم    نحمده ونصلي على رسوله الكريم    وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 5

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

இதழ் 11

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

16 ரஜப் 1441 ஹிஜ்ரி கமரி 12 அமான் 1399 ஹிஜ்ரி ஷம்ஸி

12 மார்ச் 2020


**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**நினைவில் கொள்ளுங்கள். மனிதன் நல்லவன் என்பதற்கான அடையாளம் நல்லொழுக்கம் ஆகும்... எவரின் கைகளிலிருந்தும் நாவிலிருந்தும் (பிற) முஸ்லிம்கள் பாதுகாப்பாக இருப்பார்களோ அவரே முஸ்லிமாவார்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

## நல்லொழுக்கம் மனிதன் நல்லவன் என்பதற்கான அடையாளமாகும்

இப்போது நான் ஒரு முக்கியமான, மிக முக்கியமான அவசியமான வி–யத்தைக் கூற விரும்புகின்றேன். நமது ஜமாஅத் அசட்டையாகவும் கவனக்குறைவாகவும் இதனை கேட்காதிருக்க வேண்டும். நினைவில் கொள்ளுங்கள், நல்லொழுக்கம் மனிதன் நல்லவன் என்பதற்கான அடையாளமாகும். பொதுவாக நபிமொழிகளில் முஸ்லிம் என்பதற்கு விளக்கமாக, எவரின் கைகளிலிருந்தும் நாவிலிருந்தும் (பிற) முஸ்லிம்கள் பாதுகாப்பாக இருப்பார்களோ அவரே முஸ்லிமாவார் என்று வந்துள்ளது.

(இங்கு வரை சொற்பொழிவு செய்திருந்தபோது அஸர் நேரம் வந்துவிட்டது. எனவே அன்னாரும் சபையோர் அனைவரும் மிகவும் ஒழுக்கத்துடனும் உண்மையான ஆவலுடனும் அஸர் தொழுகையை நிறைவேற்றினார்கள். பிறகு அனைவரும் உடலாலும் மனதாலும் ஒன்றிணைந்து இறைமனிதரின் வி–யங்களை கேட்கத் தொடங்கினர். அன்னார் சொற்பொழிவை மீண்டும் தொடர்ந்தார்கள்–அசிரியர்)

நான் இவ்வி–யத்தை விட்டுவிட்டேன் அதாவது, இஹ்தி நஸ்ஸிராத்தல் முஸ்தகீம் எனும் துஆவை கற்பித்ததில் அல்லாஹ் விரும்புவது என்னவென்றால் மனிதன் மூன்று அம்சங்களை கவனத்தில் கொள்ள வேண்டும், ஒன்று; நல்லொழுக்க நிலைபாடு, இரண்டு: கொள்கை நிலைபாடு, மூன்று: செயல்களின் நிலைபாடு. இவற்றை ஒன்றிணைத்துக் கூறவேண்டுமென்றால் மனிதன் இறைவனின் ,அற்றல்களின் மூலமாக தனது நிலையை சீர்திருத்திக்கோள்ள வேண்டும். பிறகு அல்லாஹ்விடம் கேட்க வேண்டும். சீர்திருத்த முயற்சியில் துஆ செய்யக்கூடாது என்பது பொருள் கிடையாது. இல்லை! அந்தேரத்திலும் துஆ செய்துகொண்டிருக்க வேண்டும். இய்யாக நஃபுது வ இய்யாக நஸ்தயீனில் இடைவெளி இல்லை. இய்யாக நஃபுதுவில் காலம் முன்னிலை வகிக்கின்றது. ஏனென்றால் எந்த நிலையில் தனது ரஹ்மானிய்யதிலிருந்து நமது துஆ மற்றும் வேண்டுதல் இன்றி நம்மை மனிதனாகப் படைத்துள்ளான். புலன்களையும் பல்வேறு ஆற்றல்களையும் அருள்களையும் வழங்கியுள்ளான். அந்நேரம் நமது துஆக்கள் இருக்கவில்லை. அந்நேரம் இறைவனின் அருள் மட்டுமே இருந்தது. இதுவே முதன்மையாக உள்ளது.

## ரஹ்மானிய்யத் (அளவின்றி அருளுதல்) மற்றும் ரஹீமிய்யத் (மேன்மேலும் கருணை புரிதல்)

நினைவில் கொள்ளுங்கள், கருணை இரண்டு வகைப்படும். ஒன்று ரஹ்மானிய்யத். மற்றொன்று ரஹீமிய்யத் எனும் பெயரால் கூறிப்பிடப்படுகின்றது. ரஹ்மானிய்யத் எப்படிப்பட்ட அருள் என்றால் அது நாம் படைக்கப்படுவதற்கு முன்பிருந்தே தொடங்கி விட்டது. உதாரணமாக அல்லாஹ் முதன்முதலில் தனது ஆதிஅறிவினைக் கண்டு இவ்வகையான பூமியையும் வானத்தையும் பூமியிலுள்ள, வானத்திலுள்ள பொருள்களையும், அவையனைத்தும் நமக்கு பயன்படும் வகையிலும் பயன்பட்டுக்கொண்டிருக்கும் வகையிலும் படைத்துள்ளான். அந்த அனைத்து பொருள்களிலிருந்தும் மனிதனே பொதுவாக பயன்பெறுகின்றான்.

மனிதனுக்காக பயனுள்ள பொருள்களாக விளங்கும் செம்மறிஆடு, ஆடு மற்றும் விலங்கினங்கள் என்ன பயனைப் பெறுகின்றன? பாருங்கள், பௌதீக வி–யங்களில் மனிதன் எப்படியெல்லாம் உயர் தரத்தையுடைய உணவுகளை உண்ணுகின்றான். உயர் தரத்தையுடைய இறைச்சி மனிதனுக்காக இருக்கின்றது. துண்டுகளும் எலும்புகளும் நாய்களுக்காக இருக்கின்றன. பௌதீக ரீதியாக மனிதனுக்கு சுவைகளும் இன்பங்களும் கிடைக்கின்றன. விலங்குகளும் இதில் பங்கு வகிக்கின்றன என்றாலும் மனிதனுக்கு அந்த மேலான தகுதி கிடைத்துள்ளது. மேலும் ஆன்மீக இன்பங்களில் விலங்குகள் பங்குப்பெறக்கூட இல்லை. எனவே இந்த இரண்டுவகை அருள்கள் உள்ளன. ஒன்று, நாம் படைக்கப்படுவதற்கு முன்பே ஆதிகாலம் முதல் படைப்பின் தொடக்கத்தின் வடிவில் மூலக்கூறுகள் போன்ற பொருள்களை படைத்தான். அவை நமக்கு தொண்டாற்றி வருகின்றன. மேலும் அவை நாம் தோற்றம், விருப்பம் மற்றும் துஆவிற்கு முன்பிருற்தே இருக்கின்றன. அவை ரஹ்மானிய்யத்தின் அடிப்படையில் பிறந்தன. இரண்டாவது அருள் ரஹீமிய்யத்தாகும். அதாவது நாம் துஆ செய்கின்றபோது அல்லாஹ் வழங்குகின்றான். சிந்தித்துப்பார்த்தால், இயற்கைச் சட்டத்தின் தொடர்பு எப்போதும் துஆவுடன் தொடர்புடையதாக இருக்கின்றது என்பது தெரியவரும். அதனையும் கூறிவிட நான் விரும்புகின்றேன்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 110,111 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**இஸ்லாத்தில் இறைவனுக்கு இணை வைத்தல் மற்றும் பெற்றோர்களின் உரிமையை பறிப்பது ஆகியவற்றிற்குப் பிறகு மூன்றாவதாக பொய் பேசுவது மிகப்பெரிய பாவமாகும். ஈமானும் கோழைத்தனமும் ஓரிடத்தில் ஒன்று சேர முடியும். ஆனால் ஈமானும் பொய்யும் ஓரிடத்தில் ஒன்று சேர முடியாது.... எவர் ஒருவர் ஏமாற்று வேலையை செய்வாரோ அவர் கியாமத் நாளன்று இறைவனது கடுமையான தண்டைக்குக் கீழ் வருவார்**

**பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலப்பற்ற மற்றும் பற்றுணர்வுமிக்க சஹாபியான ஹஸ்ரத் முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

**மதீனாவின் அரசாங்கத்திற்கு எதிராக ஏமாற்று வேலையை செய்தது, முஸ்லிம்களுக்கு எதிராக உடன்படிக்கையை மீறியது, போருக்கு தூண்டியது, குழப்பம் விளைவிப்பது, அசுத்தமான சொற்களை பயன்படுத்தியது, கொலை செய்ய முயற்சி செய்தது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட அசுத்தமான இயல்பைக் கொண்டிருந்த கஅப் பின் அஷ்ரஃப் கொலை செய்யப்பட்டதன் காரணம் தொடர்பான விரிவான விளக்கம்**

**கஅப் கொலை செய்யப்பட்டது தொடர்பாக எழுப்பப்படுகின்ற ஆட்சேபனைகளுக்கு தக்க பதில்**

**اَلْحَرْبُ خُدْعَةٌ என்பதன் நுட்பமான விளக்கம்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 07 பிப்ரவரி 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **07 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ -

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - الرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ -

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

ஹஸ்ரத் முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) அன்ஸாரி என்ற சஹாபியின் நற்குறிப்பை நான் இன்று எடுத்துரைப்பேன். ஹஸ்ரத் முஹம்மத் அவர்களின் தந்தையார் பெயர் முஸ்லிமா பின் சல்மா ஆகும். அன்னாரின் பாட்டனார் பெயர் சல்மா என்பது மட்டுமல்லாமல் காலித் என்றும் கூறப்படுகின்றது. அன்னாரின் தாயார் பெயர் உம்மே சஹம் ஆகும். அன்னாரின் முழுப் பெயர் கலீதா பின்த் அபூ உபைதா ஆகும். அன்னார் அன்ஸாரின் கோத்திரமான அவ்ஸ் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள்.

ஹஸ்ரத் முஹம்மத் பின் மஸ்லமா அவர்களின் சுட்டுப் பெயர் அபூ அப்துல்லாஹ் அல்லது அப்துர் ரஹ்மான் மற்றும் அபூ ஸயீத் என்றும் கூறப்படுகின்றது. அல்லாமா இப்னு ஹிஜ்ரி அவர்களின் பார்வையில் அபூ அப்துல்லாஹ் என்பதே மிகவும் சரியானதாகும்.

ஒரு கூற்றின் அடிப்படையில் அன்னார் நபித்துவம் தோன்றுவதற்கு 22 ஆண்டுகளுக்கு முன்பாக பிறந்தார்கள். மேலும் அறிவீனமான காலகட்டத்தில் முஹம்மத் என்று பெயர் வைக்கப்பட்டவர்களைச் சார்ந்தவராக அன்னார் இருந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 338 முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா தொகுதி 6 பக்கம் 28 முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 106 முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மதீனத்து யூதர்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் எந்த நபியைக் குறித்து நற்செய்தி வழங்கி இருந்தார்களோ அந்த நபியை எதிர்பார்த்து இருந்தார்கள். தோன்றக்கூடிய அந்த நபியின் பெயர் முஹம்மத் ஆக இருக்கும் என்றும் அவர்கள் கூறி வந்தார்கள். அரபு வாசிகள் இந்த விஷயத்தைக் கேட்டதும் அவர்கள் தமது பிள்ளைகளுக்கு முஹம்மத் என்று பெயர் வைக்க தொடங்கி விட்டார்கள்.

சீரத்துன் நபி புத்தகங்களில் அறிவீனமான காலகட்டத்தில் எவர்களின் பெயர் முஹம்மத் என்ற வைக்கப்பட்டதோ அவர்களின் எண்ணிக்கை 3 லிருந்து 15 வரை என்று கூறப்பட்டுள்ளது.

சீரத் இப்னு ஹிஷாம் புத்தகத்தில் விரிவுரையாளரான அல்லாமா சஹீலி சாஹிப் முஹம்மத் என்று பெயர் வைக்கப்பட்ட மூன்று நபர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

அல்லாமா இப்னு அஸீர் அவர்கள் ஐந்து நபர்களின் பெயர்களை எழுதியுள்ளார்கள்.

அப்துல் வஹாப் ஷேரானீ சாஹிப் அவர்கள், முஹம்மத் என்ற பெயர் வைக்கப்பட்ட நபர்கள் 15 என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

தகவலுக்காக அந்த 15 பெயர்களை நான் கூறி விடுகின்றேன். அவை இவையாகும். முஹம்மத் பின் ஸுஃப்யான், முஹம்மத் பின் அவ்ஹீ, முஹம்மத் பின் ஹம்ரான், முஹம்மத் பின் கஸாயீ, முஹம்மத் பின் அதீ, முஹம்மத் பின் உஸாமா, முஹம்மத் பின் பரா, முஹம்மத் பின் ஹாரிஸ், முஹம்மத் பின் ஹர்மாஸ், முஹம்மத் பின் ஹுூரி, முஹம்மத் பின் யஹ்மத், முஹம்மத் பின் யஸீத், முஹம்மத் பின் அஸைதீ, முஹம்மத் பின் ஃபகீமி, ஹஸ்ரத் முஹம்மத் பின் மஸ்லமா.

(ரவ்ஸுல் அன்ஃப் ஷரஹ் இப்னு ஹிஷாம் அல்லாமா சுஹைலி தொகுதி 1 பக்கம் 280, பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா தொகுதி 6 பக்கம் 28 முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா லாபின் அஸீர் தொகுதி 5 பக்கம் 72 முஹம்மத் பின் அஹீஹா (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஹம்மத் பின் முஸ்லிமா அவர்கள் ஆரம்ப காலகட்டத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களில் ஒருவர் ஆவார்கள். ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் அவர்களுக்கு முன்பாக முதலில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஹஸ்ரத் உபைதா பின் அல்ஜராஹ் அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனா வந்தபோது

அன்னாருடன் ஹஸ்ரத் முஹம்மத் பின் முஸ்லிமா அவர்களுடைய சகோதரத்துவ பந்தத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏற்படுத்தினார்கள்.

மேலும் அன்னார் கஅப் பின் அஷ்ரப் மற்றும் அபூ ராஃபி சலாம் பின் அபூ ஹகீக் ஆகியோரைக் கொலை செய்த சஹாபாக்களைச் சார்ந்தவராக இருந்தார்கள். இந்த இருவரும் முஸ்லிம்களுக்கு மறைமுகமாக நஷ்டத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்து வந்த குழப்பவாதிகள் ஆவர். இன்னும் சொல்வதென்றால், முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தச் செய்வதற்கு முயற்சி செய்து வந்தனர். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் தாக்குதல் நடத்த முயற்சி செய்தனர். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களைக் கொலை செய்வதற்கு சில சஹாபாக்களை நியமனம் செய்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சில போர்களின் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் முஹம்மத் பின் முஸ்லிமா அவர்களை மதீனாவின் பொறுப்பாளராகவும் நியமனம் செய்தார்கள். ஹஸ்ரத் முஹம்மத் பின் முஸ்லிமா அவர்களின் மகனான ஜாஃபர், அப்துல்லாஹ், சஅத், அப்துர் ரஹ்மான் மற்றும் உமர் ஆகியோர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள்.

ஹஸ்ரத் முஹம்மத் பின் முஸ்லிமா அவர்கள் பத்ர், உஹது ஆகிய போர்களிலும், தபூர் போர் தவிர மற்ற அனைத்துப் போர்களிலும் அன்னார் கலந்து கொண்டார்கள். ஏனென்றால் தபூக் போரில் அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அனுமதியுடன் மதீனாவில் தங்குவதற்காக பின்தங்கி இருந்தார்கள்.

(அல் அஸாபா ஃபி தமீஸுஸ் சஹாபா தொகுதி 6 பக்கம் 28,29 முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & ஷரஹ் ஸர்கானீ தொகுதி 2 பக்கம் 511 ஹதீஸ் பனூ நஸீர் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஏற்கனவே கூறப்பட்டதுபோன்று குழப்பவாதிகளான இஸ்லாத்தின் எதிரிகளின் கொலையில் ஹஸ்ரத் முஹம்மத் பின் முஸ்லிமா அவர்களும் பங்கு பெற்றிருந்தார்கள். அதனுடைய சில விளக்கத்தை ஹஸ்ரத் உபாதா பின் பிஷர் என்ற சஹாபியின் நற்குறிப்பில் ஒன்றரை வருடங்களுக்கு முன்பாக கூறி இருந்தேன். இருந்தபோதிலும் சில விஷயங்களை சுருக்கமாக கூறி விடுகின்றேன். மேலும் சில விளக்கங்களும் உள்ளன.

சீரத் காத்தமுன் நபிய்யீன் புத்தகத்தில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்கள் கஅப் பின் அஷ்ரஃப் அவர்களின் கொலை சம்பவத்தைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

பத்ர் போரானது யூதர்களின் உள்ளத்திலிருந்து பகைமையை வெளிப்படுத்தியது. அவர்கள் இவ்வாறு எதிர்ப்பில் முன்னேறினர். தங்களது தீங்கு மற்றும் குழப்பமான காரியங்களில் முன்னேற்றமடைந்து கொண்டே சென்றனர். எனவே கஅப் பின் அஷ்ரஃபின் கொலை சம்பவமும் அதன் தொடர்ச்சியாகவே இருந்தது. மதத்தால் அவன் யூதனாக இருந்தான். ஆனால் உள்ளபடியே அவன் யூத வம்சாவளியை சார்ந்தவனாக இருக்கவில்லை. மாறாக, அவன் அரபியாக இருந்தான். அவனுடைய தந்தை அஷ்ரஃப் பனூ நப்ஹான் மிகவும் ஒரு புத்திசாலி மனிதராக இருந்தார். மதீனாவில் வந்து பனூ நஸீர் கோத்திரத்துடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார். மேலும் எந்த அளவுக்கு அதிகாரத்தையும், தாக்கத்தையும் பெற்றார் என்றால் பனூ நஸீர் கோத்திரத்தின் தலைவரான அஃஸம், அபூ ராஃபி பின் அபீ அல்ஹகீக் தனது மகளை அவருக்கு மணமுடித்துக் கொடுத்தார். அந்த பெண்ணின் வயிற்றில் கஅப் பிறந்தான்.

அவன் வளர்ந்து பெரியவனாகி தனது தந்தையை விட அதிகமான அந்தஸ்தை பெற்றான். எந்த அளவுக்கு என்றால் முழு அரபி யூதர்களும் அவனை ஒரு வகையில் தங்களது தலைவராக கருதும் அளவுக்கு அந்தஸ்தை பெற்றான். ஒழுக்க ரீதியில் அவன் மிகவும் மோசமான ஒழுக்கமுடைய மனிதனாக இருந்தான். இரகசிய திட்டங்களைத் தீட்டுவதில் அவன் மிகவும் புலமைப் பெற்றிருந்தான். நன்மை என்பது வாடைக்கு கூட அவனுக்கு அருகில் அண்டாமல் இருந்தது. தீமைகளில் முன்னேறி இருந்தான். சண்டையிட வைப்பதிலும் குழப்பங்களை உருவாக்குவதிலும் தேர்ச்சி பெற்றிருந்தான்.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனா வந்தபோது கஅப் பின் அஷ்ரஃப் மற்ற யூதர்களுடன் இணைந்து உடன்படிக்கையை மேற்கொண்டிருந்தான். அந்த உடன்படிக்கையானது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் யூதர்களுக்கு மத்தியில் நட்பு மற்றும் அமைதி மற்றும் ஒன்றுபட்ட மதீனாவின் பாதுகாப்பு தொடர்பாக எழுத்துப் பூர்வமான ஒப்பந்தமாக செய்யப்பட்டிருந்தது. ஆனால் கஅப் தனது உள்ளத்தில் பகைமை மற்றும் காழ்ப்புணர்ச்சி என்ற நெருப்பில் எரிந்து கொண்டிருந்தான்.

அவன் இரகசிய சதித்திட்டங்கள் மூலமாக இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் தோற்றுனரை எதிர்க்கத் தொடங்கி இருந்தான். கஅபின் எதிர்ப்பு மிகவும் அபாயகரமான சூழலை உருவாக்கி இருந்தது. மேலும் எதிர்ப்பிலும் குழப்பங்கள் செய்வதிலும் அவன் முன்னேறிக் கொண்டே இருந்தான். இறுதியில் பத்ர் போருக்குப் பிறகு மிக மோசமான மற்றும் கடுமையான குழப்பங்களை செய்கின்ற வழிமுறையை அவன் மேற்கொண்டிருந்தான். அதன் விளைவாக முஸ்லிம்களுக்கு மிக அபாயகரமான சூழல் உருவாகி இருந்தது.

பத்ர் போரில் முஸ்லிம்கள் ஒரு அசாதாரண வெற்றி கிடைத்தது. மேலும் குரைஷிய தலைவர்களில் பெரும்பாலார் கொல்லப்பட்டிருந்தனர். அதன் காரணமாக இனி இந்த புதிய மார்க்கம் அழிவதாக நமக்குத் தெரியவில்லை என்று அவன் கருதினான். இந்த புதிய மார்க்கம் தாமாகவே அழிந்து விடும் என்று அவன் கருதிக் கொண்டிருந்தான். ஆனால் அவன் இஸ்லாத்தின் முன்னேற்றத்தைக் கண்டதும், பத்ர் போரில் முஸ்லிம்கள் வெற்றியடைந்ததைக் கண்டதும் இனி இந்த மார்க்கம் அவ்வளவு விரைவாக அழியாது என்பதை அறிந்து கொண்டான். எனவே பத்ர் போருக்குப் பிறகு இஸ்லாத்தை அழித்து ஒழிப்பதற்கு தனது முழுமையான முயற்சிகளை செய்தான். மேலும் அழித்து விட வேண்டும் என்று உறுதி பூண்டிருந்தான்.

உண்மையில் பத்ர் போர் வெற்றியானது இஸ்லாத்திற்கு அவன் கற்பனை செய்திராத உறுதிப்பாட்டை வழங்கி இருந்தது. இந்த

**திருக்குர்ஆனிலிருந்து...**

உங்கள் நண்பர் அல்லாஹ்வும், அவனது தூதரும், மேலும் தொழுகையினை நிலைநாட்டியும், ஸக்காத்துக் கொடுத்தும் வரும் நம்பிக்கையாளர்களுமாவர். அவர்கள் இறைவனிடம் குனிந்தவராயும் இருப்பர். (5:56)

Faizal Hameed Ilahi, Tittacherry

உறுதி அவனுக்கு ஏற்பட்ட பிறகு அவன் கோபத்தாலும், பகைமையாலும் நிரப்பினான். மேலும் உடனடியாக பயணத்திற்கு ஆயத்தம் செய்து மக்காவிற்குச் சென்றான். அங்கு சென்று தனது இனிமையான பேச்சாலும், கவிதை புலமையாலும் குரைஷிகளின் உள்ளங்களில் நெருப்பை மூட்டினான். மேலும் அவர்களின் உள்ளங்களில் முஸ்லிம்களின் இரத்தத்தை சிந்தச் செய்வதற்கு தனிந்திடாத தாகத்தை ஏற்படுத்தினான். மேலும் அவர்களின் உள்ளங்களை பழிவாங்கும் உணர்வுகளாலும், பகைமையாலும் நிரப்பினான்.

கஅபின் இந்த செயல்களால் அவர்களின் உள்ளங்களில் ஒரு உட்சபட்சமான உணர்வு தோன்றியது. அப்போது அவன் கஃபத்துல்லாஹ்வின் முற்றத்திற்கு சென்று கஃபாவின் திரைச்சீலையை அவர்களின் கரங்களில் கொடுத்து, எதுவரை இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் தோற்றுனரை முற்றிலும் அழித்துவிடாத வரை நாங்கள் பின்வாங்க மாட்டோம் என்று சத்தியம் வாங்க வைத்தான். அதன் பிறகு அந்த துர்பாக்கியசாலி ஏனைய அரபு கோத்திரங்களின் பக்கம் சென்றான். ஒவ்வொரு சமுதாயமாக தேடிச் சென்று முஸ்லிம்களுக்கு எதிராக பகைமையை விதைத்தான். மேலும் பின்னர் மதீனாவிற்கு திரும்பி வந்து முஸ்லிம் பெண்களுக்கு எதிராக அசுத்தமான கவிதைகளை படித்தான். அதாவது மிக மோசமான, ஆபாசமான வழிமுறைகளை முஸ்லிம் பெண்கள் தொடர்பாக தனது கவிதைகளில் குறிப்பிட்டிருந்தான்.

எந்த அளவுக்கு என்றால், நபியின் குடும்பப் பெண்களைக் கூட தமது மோசமான கவிதைகளுக்கு இலக்காக்குவதிலிருந்து அவன் விலகி இருக்கவில்லை. நாட்டில் தனது கவிதைகளை பேச வைத்தான். எவ்வாறிருப்பினும் இறுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவனை கொலை செய்ய முடிவெடுத்தார்கள்.

எனினும் அவன் அதற்கு முன்பாகவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்கு சதித்திட்டம் தீட்டினான். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஒரு விருந்து என்ற பெயரில் தனது வீட்டிற்கு அழைத்து சில யூத இளைஞர்கள் மூலம் அன்னாரை கொலை செய்வதற்கு சதித்திட்டம் தீட்டியிருந்தான். ஆனால் அல்லாஹ்வின் அருளால் அதுபற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு குறித்த நேரத்தில் செய்தி கிடைத்து விட்டது. மேலும் அவனது இந்த சதித்திட்டம் வெற்றி பெற முடியாமல் போனது. ஆக நிலைமை இவ்வாறானது. உடனடிக்கையை முறித்தல், கிளர்ச்சி செயதல், போருக்கான தூண்டுதல், குழப்பம் விளைவித்தல், ஆபாசமான விமர்சனங்களை செய்தல், கொலை சதி ஆகிய குற்றச்சாட்டுகள் கஅபிற்கு எதிராக ஆதாரப்பூர்வமாக தெளிவாக நிரூபணம் ஆகி இருந்தன.

எனவே மதீனாவிற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருகை தந்த பிறகு மதீனாவின் அனைத்து சமுதாயங்களுடனும் ஏற்படுத்தப்பட்டிருந்து உடன்படிக்கையின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவின் ஜனநாயக அரசாங்கத்தின் தலைவராகவும், ஆட்சி அதிகாரத்தின் உயர் தலைவராகவும் இருந்தார்கள். எனவே அந்த அடிப்படையில் கஅப் பின் அஷ்ரஃப் தனது செயல்பாடுகளின் காரணத்தால் கொலை செய்யப்படுவதற்கு தகுந்தவன் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தீர்ப்பளித்தார்கள்.

அக்காலத்தில் கஅபின் குழப்பங்களின் காரணமாக மதீனாவின் சூழல் எப்படி இருந்தது என்றால் ஒருவேளை பகிரங்கமாக அவனுக்கு எதிரான குற்றங்களை அறிவித்து கொலை செய்யப்பட்டிருந்தால் அந்நிலையில் மதீனாவில் ஒரு பெரும் போர் மூழ்வதற்கான வாய்ப்பு இருந்தது. அதில் எவ்வளவு இரத்தம் சிந்தப்படும் என்பதை எவரும் கணிக்க முடியாத நிலை இருந்தது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைத்து சாத்தியமான மற்றும் ஆகுமான தியாகங்களைச் செய்து பொதுமக்களின் இரத்தம் சிந்தப்படுவதை தடுக்க நினைத்திருந்தார்கள். எனவே கஅபை பகிரங்கமாக கொலை செய்ய வேண்டாம் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். மாறாக, சில நபர்கள் மௌனமாக ஒரு உகந்த சந்தர்ப்பத்தில் அவனை கொலை செய்ய வேண்டும் என்றும் வழிகாட்டினார்கள்.

மேலும் இந்த பணியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவ்ஸ் கோத்திரத்தைச் சார்ந்த ஒரு கலப்பற்ற சஹாபியான ஹஸ்ரத் முஹம்மத் பின் முஸ்லிமா (ரலி) அவர்களிடம் ஒப்படைத்திருந்தார்கள். மேலும் அவனைக் கொலை செய்வதற்கு எந்த வழிமுறையை மேற்கொண்டாலும் அது தொடர்பாக அவ்ஸ் கோத்திரத்தின் தலைவரான சஅத் பின் மஆஸ் அவர்களின் ஆலோசனைக்குப் பிறகே செய்ய வேண்டும் என்றும் அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழிகாட்டி இருந்தார்கள்.

ஹஸ்ரத் முஹம்மத் பின் முஸ்லிமா (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அவன் மௌனமாக கொலை செய்வதற்கு கூட அவனிடம் ஏதாவதென்றை பேசித்தானே ஆக வேண்டும். ஏதாவதென்றை கூற நேரிடும் அல்லவா? என்று கேட்டார்கள். அதாவது ஏதாவதொரு சாக்குப்போக்குகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும் அல்லவா? அப்போதுதானே கஅபை அவனது வீட்டிலிருந்து வெளியேற்றி பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு சென்று கொலை செய்ய முடியும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மதீனாவில் ஏற்படப்போகும் பெரும் பெரும் தாக்கங்களை கருத்தில் கொண்டு, சரி அவ்வாறு செய்யுங்கள் என்று கூறினார்கள்.

எனவே ஹஸ்ரத் முஹம்மத் பின் முஸ்லிமா (ரலி) அவர்கள், சஅத் பின் மஆஸ் அவர்களின் ஆலோசனைப்படி அபூ நாயிலா மற்றும் இரண்டு மூன்று சஹாபிகளை தம்முடன் அழைத்துக் கொண்டார்கள். மேலும் கஅபின் வீட்டைச் சென்றடைந்தார்கள். கஅபை அவனது வீட்டிலிருந்து வெளியே வர வழைத்து பேசினார்கள். அதாவது எங்களது முஹம்மத் (ஸல்) அவர்கள், சதகா கொடுக்கும்படி எங்களிடம் கூறியுள்ளார்கள். நாங்களோ ஏழைகளாக உள்ளோம். நீங்கள் தயவு செய்து உதவி செய்து எங்களுக்கு கடன் தருவீர்களா? என்று கேட்டார்கள்.

எனவே இதைக்கேட்ட கஅப் மிகவும் மகிழ்ச்சியுடன் துள்ளிக் குதித்தான். மேலும் கூறினான்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! இப்போது ஒன்றும் ஆகிவிடவில்லை. நீங்கள் அனைவரும் அந்த நபரிடமிருந்து முகம் திருப்பி அந்த நபரை விட்டு விடுவதற்கான அந்த நாள் வருவதற்கு வெகு தூரமில்லை என்று கூறினான். அதற்கு முஹம்மத் பின் முஸ்லிமா அவர்கள் அவனிடம், அது இருக்கட்டும். நாங்கள் முஹம்மத் (ஸல்) அவர்களை பின்பற்றி விட்டோம். நாங்கள்

**திருக்குர்ஆனிலிருந்து...**

அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும், நம்பிக்கை கொண்டவர்களையும் தங்கள் நண்பர்களாகக் கொள்கின்றவர்கள் நிச்சயமாக அல்லாஹ்வின் கூட்டத்தினரே. அவர்களே நிச்சயமாக வெற்றி பெறுவர். (5:57)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

உம்மிடம் எந்த பணிக்காக வந்துள்ளோமோ அது தொடர்பாக பேசுங்கள். கடன் தருவீர்களா? மாட்டீர்களா? என்று அவனிடம் கேட்டார்கள். அதற்கு கஅப், ஆம் என்று கூறினான். ஆயினும் ஏதாவது பொருளை அடகு வையுங்கள் என்றும் கூறினான். அதற்கு எந்தப் பொருளை என்று முஹம்மத் அவர்கள் கேட்டார்கள். அதற்கு அந்த துர்பாக்கியசாலி, உங்களது பெண்களை அடகு வையுங்கள் என்று கூறினான். அதற்கு முஹம்மத் அவர்கள் தமது கோபத்தை அடக்கியவாறு, இது எவ்வாறு சாத்தியமாகும்? உம்மைப் போன்ற நபர்களுடன் நாங்கள் எப்படி எங்களது பெண்களை அடகு வைக்க முடியும் என்று கேட்டார்கள். அதற்கு அவன், அப்படியென்றால் உங்களது மகன்களை அடகு வையுங்களேன் என்று கூறினான். அதற்கு இதுவும் சாத்தியமற்ற ஒன்றாகும் என்று ஹஸ்ரத் முஹம்மத் பின் முஸ்லிமா அவர்கள் பதிலளித்தார்கள். முழு அரபின் சாபத்தையும் நாங்கள் எங்கள் தலைமேல் சுமக்க முடியாது என்றும் கூறினார்கள். ஆயினும் நீங்கள் உதவி செய்தால் நாங்கள் எங்களது ஆயுதங்களை உங்களிடம் அடகு வைக்கின்றோம் என்றும் கூறினார்கள். அதை கஅப் ஏற்றுக் கொண்டான். முஹம்மத் பின் முஸ்லிமா (ரலி) அவர்கள் மற்றும் அவர்களுடைய தோழர்கள் இரவில் வருவதாக வாக்குறுதி அளித்து விட்டு திரும்பிச் சென்று விட்டார்கள்.

இரவு ஆனபோது அந்த குழுவினர் தனது ஆயுதங்களை எடுத்துக் கொண்டு கஅபின் வீட்டை வந்தடைந்தார்கள். ஏனென்றால் அப்போது வெளிப்படையாக உடன்படிக்கைக்கு ஏற்ப அந்த ஆயுதங்களை அவர்களால் கொண்டு வர முடிந்திருந்தது. இவ்வாறு அவனை வீட்டிலிருந்து வெளியேற்றி அவனிடம் பேச்சு கொடுத்தவாறு அவனை ஒரு ஒதுக்கு புறத்திற்கு கொண்டு சென்றார்கள். அவர்கள் சென்று கொண்டிருக்கின்றபோது சிறிது நேரத்தில் முஹம்மத் பின் முஸ்லிமா அல்லது அவரது நண்பர்களில் ஒருவர் ஏதோவொரு சாக்குப் போக்கைக் கூறி கஅபின் தலை மீது கையை வைத்தார்கள். மிக வேகமாக அவனது முடியை வலிமையாக பிடித்து இவனை கொலை செய்யுங்கள் என தனது நண்பர்களுக்கு குரல் கொடுத்தார்கள். ஏற்கனவே ஆயத்தமாக இருந்த மற்றும் ஆயுதங்கள் வைத்திருந்த சஹாபாக்கள் உடனடியாக அவன் மீது வாளை வீசினார்கள். இறுதியில் கஅப் கொலையுண்டு கீழே விழுந்தான்.

முஹம்மத் பின் முஸ்லிமா மற்றும் அவர்களது தோழர்கள் அங்கிருந்து வேக வேகமாக புறப்பட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்து சேர்ந்தார்கள். மேலும் அவன் கொலை செய்யப்பட்ட தகவலை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வழங்கினார்கள். கஅப் கொலை செய்யப்பட்ட செய்தி மிக வேகமாக பரவியது. அப்போது நகரத்தில் பதற்றம் தொற்றிக் கொண்டது. யூதர்கள் கடுமையாக கோபங் கொண்டார்கள். இரண்டாம் நாள் காலை வேளையில் யூதர்களின் ஒரு குழு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்தது. எங்களது கோத்திரத்தின் தலைவர் கஅப் பின் அஷ்ரஃபை இவ்வாறு கொலை செய்து விட்டார்கள் என்று புகார் செய்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களின் கூற்றுகளை கேட்டுவிட்டு கூறினார்கள்: கஅப் என்ன என்ன குற்றங்களை செய்திருந்தான் என்பது உங்களுக்குத் தெரியாதா? என்று அவர்களிடம் கேட்டார்கள். மேலும் கஅப் செய்திருந்த குற்றங்களான, உடன்படிக்கையை மீறுதல், போருக்கு தூண்டுதல், குழப்பம் விளைவித்தல், ஆபாச பேச்சுக்கள், கொலை சதி செய்தல் போன்ற அவனது செயல்களை அவர்களுக்கு நினைவூட்டினார்கள். அதனால் அந்த மக்கள் அச்சத்திற்குள்ளாகி மௌனமாகி விட்டார்கள். பிறகு அவர்கள் எந்த கூச்சலும் செய்யவில்லை.

அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களிடம் கூறினார்கள்: குறைந்தபட்சம் எதிர்காலத்தில் நீங்கள் அமைதி மற்றும் ஒத்துழைப்புடன் இருக்க வேண்டும். குழப்பங்களுக்கான எந்த செயலிலும் ஈடுபடக்கூடாது என்று அவர்களிடம் கூறினார்கள். அந்த வகையில் யூதர்களின் விருப்படத்துடன் ஒரு புதிய ஒப்பந்தம் எழுதப்பட்டது. அதில் யூதர்கள் முஸ்லிம்களுடன் அமைதியுடனும், பாதுகாப்புடனும் வாழ்வோம் மற்றும் குழப்பமான காரியங்களிலிருந்து விலகி இருப்போம். இவ்வாறு புத்தம் புதிதான ஒரு உடன்படிக்கை செய்யப்பட்டது.

கஅப் குற்றவாளியாக இல்லாதிருந்தால் பின்னர் ஒருபோதும் யூதர்கள் இவ்வளவு எளிதாக இந்த உடன்படிக்கையை செய்திருக்க மாட்டார்கள். மேலும் கஅப் கொலை செய்யப்பட்ட பிறகு மௌனமாகவும் இருந்திருக்க மாட்டார்கள். எவ்வாறிருப்பினும் எதிர்காலத்தில் நாங்கள் அமைதியாக வாழ்ந்து வருவோம் என்று புதிதாக உடன்படிக்கை செய்து கொண்டார்கள்.

இதன் பிறகு யூதர்கள் கஅப் பின் அஷ்ரஃபின் கொலையைக் குறிப்பிட்டு முஸ்லிம்கள் மீது குற்றச்சாட்டை சுமத்தியதாக வரலாற்றில் எந்த இடத்திலும் குறிப்புகள் இல்லை. ஏனென்றால் கஅப் தனக்குரிய தண்டனையை பெற்றுக் கொண்டான் என்று யூதர்களின் உள்ளங்கள் உணர்ந்திருந்தன.

கஅப் பின் அஷ்ரஃப் கொலை செய்யப்பட்டது தொடர்பாக சில மேற்கத்திய வரலாற்று ஆய்வாளர்கள் ஏராளமான விஷயங்களை எழுதியுள்ளனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணியத்தின் மீது தாக்குதல் தொடுப்பதற்காக அந்த கொலை தீய கறையாக வெளிப்படுத்தி ஆட்சேபணைகளை உருவாக்கி உள்ளனர். ஆனால் இங்கு பார்க்க வேண்டிய விஷயம் என்னவென்றால், அந்த கொலை முதலில் ஆகுமான செயலாக இருந்ததா? இல்லையா? என்பதுதான். இரண்டாவதாக, அவனைக் கொலை செய்வதற்காக மேற்கொண்ட வழிமுறை ஆகுமானதாக இருந்ததா? இல்லையா? என்று பார்க்க வேண்டும்.

முதலாவது விஷயம் இதுவாகும். அதாவது, கஅப் பின் அஷ்ரஃப் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் முறையாக அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான உடன்படிக்கையை செய்திருந்தான். முஸ்லிம்களுக்கெதிராக நடவடிக்கை எடுப்பது ஒருபுறம் இருக்கட்டும். வெளிப்பு எதிரிகளுக்கு எதிராக முஸ்லிம்களுக்கு உதவி செய்வதாக அவர் உடன்படிக்கை செய்திருந்தார். மேலும் முஸ்லிம்களுடன் நட்புறவை மேற்கொள்வேன் என்றும் அவன் உடன்படிக்கை செய்திருந்தான். மேலும் இந்த உடன்படிக்கையின் அடிப்படையில் மதீனாவில் ஏற்படுத்தப்பட்டிருந்த ஜனநாயக அரசாங்கத்தையும் அதன் தலைவராக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் அவன் ஏற்றுக் கொண்டிருந்தான். மேலும் அனைத்து வகையான சண்டை சச்சரவுகளிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தீர்ப்பே அனைவராலும் ஏற்றுக்

## திருக்குர்ஆனிலிருந்து...

வேதத்தையுடையவர்கள் நம்பிக்கை கொண்டும் இறையச்சம் கொண்டும் இருப்பார்களாயின் நிச்சயமாக நாம் அவர்களின் தீமைகளை அவர்களை விட்டும் அகற்றி நிச்சயமாக அவர்களை அருட்கொடைகளைக் கொண்ட தோட்டங்களில் நுழையச் செய்திருப்போம். (5:66)

A.Basheer Ahmad, Melapalayam

கொள்ளப்பட வேண்டும் என்பதையும் அவன் ஏற்றுக் கொண்டிருந்தான்.

வரலாற்றிலிருந்து நிரூபணமாவது என்னவென்றால், இந்த உடன்படிக்கைக்கு பிறகு யூத மக்கள் தங்களது வழக்குகளை தீர்ப்பிற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் கொண்டு வந்தார்கள். அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தீர்ப்பு வழங்கி வந்தார்கள். இந்த சூழ்நிலை நிலவியபோது கஅப் அனைத்து உடன்படிக்கைகளையும் உறுதிமொழிகளையும் புறந்தள்ளி விட்டு முஸ்லிம்களிடம் இன்னும் சொல்வதென்றால் காலத்தின் அரசாங்கத்திற்கு நம்பிக்கை துரோகம் செய்தான். மதீனாவில் குழப்பத்திற்கான விதையை விதைத்தான். மேலும் நாட்டில் போர் எனும் நெருப்பை மூட்டுவதற்கு முயற்சி செய்தான். முஸ்லிம்களுக்கெதிராக அரபு கோத்திரங்களை அபாயகரமான முறையில் தூண்டி விட்டான். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்கு சதித்திட்டம் தீட்டினான்.

இந்த அனைத்து நிலைகளிலும் கஅபின் குற்றம் என்பது இன்னும் சொல்வதென்றால் ஒட்டுமொத்த குற்றங்களின் தொகுப்பு என்பது அவனை தண்டனைக்குள்ளாக்காமல் விட்டு விட முடியாமல் இருந்தது. கொலையை விட குறைவான தண்டனை வழங்கப்பட்டிருந்தால் யூதர்களின் குழப்பங்களுக்குரிய முயற்சிகள் தடைபட்டிருக்க முடியுமா? இன்றைய நாகரீகமிக்க நாடுகள் என்று அழைக்கப்படக்கூடிய நாடுகளில் கிளர்ச்சி மற்றும் உடன்படிக்கையை மீறுதல், போருக்கு தூண்டுதல், கொலை சதி ஆகிய குற்றங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்கப்படுவதில்லையா?

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்கள் எழுதியுள்ளார்கள்: கஅப் கொலை செய்யப்பட்ட வழிமுறை தொடர்பாகவே தற்போது கேள்வி எழுகிறது. கொலைக்கான வழிமுறை ஆகுமானதாக இருந்ததா? இல்லையா? அதாவது கொலைக்கான வழிமுறை என்னவாக இருந்தது? என்பது தொடர்பாகவே கேள்வி எழுகின்றது.

எனவே இது தொடர்பாக நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால், அரபு நாட்டில் அக்காலத்தில் முறையாக அரசாங்கம் ஏதும் இல்லாமல் இருந்தது. இன்னும் சொல்வதென்றால் ஒவ்வொரு நபரும் ஒவ்வொரு கோத்திரமும் சுதந்திரமான மற்றும் தன்னிறைவு பெற்றதாக இருந்தது. அதுபோன்ற நிலையில் எந்த நீதிமன்றத்திற்குச் சென்று கஅபிற்கு எதிராக வழக்கு தொடுத்து முறையாக மரண தண்டனைக்கான தீர்ப்பை பெற்றிருக்க முடியும். எந்த யூதர்களின் தலைவராக அவன் இருந்தானோ அவனிடம் சென்று முறையிட்டிருக்க முடியுமா? அந்த யூதர்கள்தான் முஸ்லிம்களுக்கு நம்பிக்கை துரோகம் செய்திருந்தார்கள். மேலும் அனுதினமும் குழப்பங்கள் செய்து வந்தார்கள். மக்கத்து குரைஷிகளுக்கு முன்னால் முஸ்லிம்களின் இரத்தத்தை குடிப்பதற்கு துடித்துக் கொண்டிருந்த மக்கத்து மக்களுக்கு முன்னால் கஅபிற்கு எதிராக வழக்கு தொடுத்திருக்க முடியுமா? முந்தைய சில மாதங்களில் மூன்று நான்கு முறை மதீனாவில் கொள்ளையடிப்பதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்த சலீம் மற்றும் கத்ஃபான் ஆகிய கோத்திரத்தினரிடம் சென்று அவனுக்கு எதிராக முறையிட்டிருக்க முடியுமா?

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: நிலைமை இவ்வாறிருக்க சிந்தித்துப் பாருங்கள். முஸ்லிம்களுக்கு இது தவிர்த்து வேறு என்ன வழி இருக்கிறது. ஒரு நபர் போருக்கு தூண்டுதல், குழப்பங்கள் செய்தல், கொலை சதியில் ஈடுபடுதல் ஆகியவற்றின் காரணமாக தனக்கும் நாட்டின் அமைதிக்கும் ஆபத்தானதாக பார்க்கின்றபோது தற்காப்பு எண்ணத்துடன் உரிய சந்தர்ப்பத்தில் அவனைக் கொலை செய்து விடுவதுதான் முஸ்லிம்களுக்கு ஒரே வழியாக இருந்தது. ஏனென்றால் ஏராளமான அமைதி நிறைந்த குடிமக்களின் உயிர் அபாயத்தில் வீழ்ந்து நாட்டின் அமைதி சீர்குலைந்து போவதற்கு பகரமாக ஒரு தீய மற்றும் குழப்பமிக்க மனிதன் கொலை செய்யப்படுவதுதான் மிகச் சிறந்ததாக இருந்தது.

இன்னொன்றையும் நினைவில் கொள்ள வேண்டும். ஹிஜ்ரத்திற்குப் பிறகு முஸ்லிம்களுக்கும், யூதர்களுக்கும் மத்தியில் செய்யப்பட்டிருந்த உடன்படிக்கையின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சாதாரண குடிமகன் என்ற அந்தஸ்தை பெற்றிருக்கவில்லை. மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவில் நிலைவெற்றிருந்த ஜனநாயக அரசாங்கத்தின் அதிபராக இருந்தார்கள். அனைத்து சண்டை சச்சரவுகளிலும், அரசியல் விவகாரங்களிலும் எந்த தீர்ப்பை அவர்கள் உகந்ததாக கருதுவார்களோ அதனை செயல்படுத்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அதிகாரம் தரப்பட்டிருந்தது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நாட்டின் அமைதியை கருத்தில் கொண்டு கஅபின் குழப்பமிக்க செயல்களின் காரணமாக அவன் கொலை செய்யப்பட தகுந்தவன் என்று தீர்ப்பளித்தார்கள். எனவே இந்த கொலைக்கான தீர்ப்பு எந்த ஆட்சேபணைக்கும் இடமில்லை. மேலும் யூதர்கள் சுயமே கஅபின் தண்டனையை அவனது குற்றங்களின் ஒளியில் ஆகுமானதுதான் என்று கருதி மௌனத்தை மேற்கொண்டார்கள் என்பதும் வரலாற்றிலிருந்து நிரூபணமாகின்றது.

கொலை செய்வதற்கு தீர்ப்பு வழங்குவதற்கு முன்பாக யூதர்களை அழைத்து கஅபின் மீதான குற்றச்சாட்டுகளை ஏன் கூறவில்லை? சான்றுகளை முழுமை செய்த பிறகு பகிரங்கமாக மற்றும் முறையாக அவனைக் கொலை செய்வதற்கு ஏன் தீர்ப்பு வழங்கப்படவில்லை? என்று ஒருவர் ஆட்சேபணை செய்தால் அதற்குரிய பதில் இதுவாகும்.

அப்போதைய சூழல் மிக அபாயகரமானதாக இருந்தது. அதுபோன்ற வழிமுறைகளின் மூலம் சமுதாயங்களுக்கிடையில் சிக்கல்கள் மேலும் அதிகரிக்கவும் அபாயமும் இருந்தது. மேலும் அந்நிலையில் அவ்வாறு செய்திருந்தால் மதீனாவில் ஒரு அபாயகரமான மற்றும் மிக மோசமான இரத்தம் சிந்தக்கூடிய போர் ஆரம்பமாவதும் ஆச்சரியத்திற்குரியதாக இருந்திருக்காது. எனவே அமைதியாக மற்றும் விரைவாக செய்யப்படுகின்ற பணிகளின் மூலம் நன்மை கிடைப்பது போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பொது அமைதியை கருத்தில் கொண்டு மௌனமாக கஅபிற்கு எதிராக தண்டனைக்கான கட்டளையை பிறப்பித்தார்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து...

மர்யமின் மகன் மஸீஹ் ஒரு தூதரேயன்றி வேறில்லை. நிச்சயமாக அவருக்கு முன்னுள்ள தூதர்கள் மரணமடைந்து விட்டனர். அவருடைய தாயார் நேர்மையான பெண்ணாக இருந்தார். அவர்கள் இருவரும் உணவு உண்டு வந்தனர். அவர்களுடைய நன்மைக்காக அடையாளங்களை எவ்வாறு நாம் விளக்கிக் கூறுகின்றோம் என்பதையும், அவர்கள் எவ்வாறு திருப்பப்படுகின்றனர் என்பதையும் பார்ப்பீராக. (5:76)

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

ஆனால் இதில் ஏமாற்றுதலுக்கான எந்த அம்சமும் இடம் பெற்றிருக்கவில்லை. மேலும் இந்த தண்டனை எப்பொழுதும் இரகசியமாக வைக்க வேண்டும் என்பதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எண்ணமாக இருந்திருக்கவில்லை. எனவேதான் இரண்டாம் நாள் காலையில் யூதர்களின் ஒரு குழு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் வந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உடனடியாக இரவில் நடந்த சம்பவங்களை விவரித்தார்கள். அந்த செயலுக்குரிய முழுப் பெறுப்பையும் தானே ஏற்றுக் கொண்டதன் மூலம் அதில் ஏமாற்றுதலுக்கான எந்த கேள்விக்கே இடமில்லை என்பதை அன்னார் நிரூபணம் செய்து விட்டார்கள். மேலும் இன்ன இன்ன அபாயகரமான குற்றங்களின் அடிப்படையில் கஅபிற்கு எதிராக இந்த தண்டனை தன்னால் வழங்கப்பட்டது என்பதையும் யூதர்களிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தெளிவுபடுத்தி விட்டார்கள்.

எஞ்சியிருப்பது இந்த ஆட்சேபணை ஆகும். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த சந்தர்ப்பத்தில் தனது சஹாபாக்களுக்கு பொய் மற்றும் ஏமாற்றுதலுக்கான அனுமதியை வழங்கினார்கள் என்பதே ஆகும். இது முற்றிலும் தவறாகும். சரியான அறிவிப்புகள் அதனைப் பொய்ப்படுத்துகின்றன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருபோதும் பொய் மற்றும் தவறான கூற்றுக்களுக்கு அனுமதி வழங்கவில்லை. இன்னும் சொல்வதென்றால், புகாரியின் அறிவிப்பின் காரணமாக அதாவது முஹம்மத் பின் முஸ்லிமா அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில், கஅபை மௌனமாக கொலை செய்வதற்கு ஏதாவதொன்றை கூற நேரிடும் அல்லவா? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மௌனமாக கொலை செய்யப்படுவதன் மூலம் ஏற்படப்போகும் மாபெரும் நன்மைகளை கருத்தில் கொண்டவாறு ஆம் என்று மட்டுமே பதில் கொடுத்தார்கள். இதை விட அதிகமாக அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சார்பாக அல்லது முஹம்மத் பின் முஸ்லிமா அவர்களின் சார்பாக வேறு எந்த விளக்கமும் தரப்படவில்லை.

கஅபை அவனது வீட்டிலிருந்து வெளியே வரவழைப்பதற்கும், கஅபை அதற்கு சம்மதிக்க வைப்பதற்கும் மௌனமாக வீட்டை விட்டு வெளியேறி தங்களுடன் அவன் வந்து விடுவதற்கும் முஹம்மத் பின் முஸ்லிமா மற்றும் அவர்களது தோழர்களுக்கு ஒன்றை கூற நேரிடும் என்பது மட்டுமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எண்ணமாக இருந்தது. இறுதியில் போர்களுக்கு மத்தியில் உளவாளிகள் தங்களது கடமைகளை செய்கின்றனர். அந்நிலையில் அவர்களுக்கும் இதுபோன்ற விஷயங்களைப் பேச நேரிடுகின்றது. அதன் மீது எந்த அறிவுள்ளவரும் ஆட்சேபணை செய்வதில்லை. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணியம் முற்றிலும் தூய்மையானதாகும்.

மற்றபடி முஹம்மத் பின் முஸ்லிமா போன்றோர் அங்கு சென்று செயல் ரீதியாக இதுபோன்ற செயல்களில் ஏன் ஈடுபட்டனர் என்ற கேள்வி எஞ்சியுள்ளது. அவர்களின் கூற்றுகளிலும் உள்ளபடியே எந்த விஷயமும் ஒழுக்கத்திற்கு எதிரானதாக இருக்கவில்லை. அவர்களில் எவரும் உண்மைக்கு மாற்றமாக எதையும் பேசவில்லை. ஆயினும் தங்களது நோக்கங்களை கருத்தில் கொண்டவாறு இரண்டு பொருள் தரக்கூடிய சொற்களை அவர்கள் பயன்படுத்தினர். இன்னும் சொல்வதென்றால், பல பொருள் தரக்கூடிய சொற்களை அவர்கள் பயன்படுத்தினார்கள். அதனைத் தவிர அவர்களுக்கு வேறு எந்த வழியும் இல்லாமல் இருந்தது. போர் சூழலில் நல்ல நோக்கத்திற்காக தெளிவான உரையாடல் மூலமாக இதுபோன்ற நிறைவான சொற்களைப் பயன்படுத்துவது எந்தவொரு அறிவுடையவரின் பார்வையிலும் நேர்மையாளரின் பார்வையிலும் ஆட்சேபணைக்குரியதாக இருக்க முடியாது.

போரில் பொய் பேசுவதும், ஏமாற்றுவதும் ஆகுமானதா? என்று சிலர் கேள்வி எழுப்பியுள்ளனர். சில அறிவிப்புகளில் இவ்வாறு வந்துள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்ஹர்பு ஹுத்அத்துன் அதாவது போர் என்பது மோசடி ஆகும் என்று கூறியுள்ளார்கள்.

இதிலிருந்து சிலர் நவூதுபில்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போரில் மோசடி செய்வதற்கு அனுமதி வழங்கியுள்ளார் என்ற முடிவுக்கு வந்து விடுகின்றார்கள். உண்மையில் அல்ஹர்பு ஹுத்அத்துன் என்பதற்கு இது பொருளே அல்ல. மாறாக, போர் சுயமே ஒரு ஏமாற்றுதலாகும். அதாவது போரின் முடிவைப் பற்றி எவரும் எதனையும் என்ன நடக்கும் என்று கூற முடியாது. அதாவது போரின் முடிவில் பெரும் தாக்கங்கள் ஏற்படுகின்றன. எப்படிப்பட்ட சூழலாக இருந்தபோதிலும் போரின் முடிவு எப்படி இருக்கும் என்று கணிக்க முடியாது. இதனை நாம் இந்த விஷயத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

ஹதீஸில் மற்றொரு இடத்தில் இந்த அறிவிப்பு இரண்டு வகையில் உள்ளது. ஓர் அறிவிப்பில் அல்ஹர்பு ஹுத்அத்துன் அதாவது போர் ஒரு ஏமாற்றுதலாகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக இந்த சொற்கள் இடம் பெற்றுள்ளன.

மற்றொரு அறிவிப்பில் இவ்வாறு உள்ளது. சமீவுல் ஹர்பு ஹுத்அத்துன் அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போரின் பெயரை ஏமாற்றுதல் என்று வைத்தார்கள்.

இரண்டு அறிவிப்புகளையும் இணைப்பதன் மூலம் இந்த முடிவுக்கு நம்மால் வர முடியும். அதாவது போரில் மோசடி செய்வது ஆகுமானதாகும் என்பதே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எண்ணமாக இருந்திருக்கவில்லை. மாறாக, போர் என்பதே ஒரு ஏமாற்றம் வழங்கக்கூடிய ஒரு விஷயமாகும் என்பதே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எண்ணமாக இருந்தது. ஆனால் போரில் ஏமாற்றுதல் ஆகுமானதாகும் என்ற பொருளை நாம் செய்தால் பின்னர் இந்த இடத்தில் நிச்சயமாக ஏமாற்றுதல் என்பதன் பொருள் போருக்கான திட்டம் வகுத்தல் என்பதாகும். மாறாக, பொய் மற்றும் மோசடி என்பது ஒருபோதும் அதன் பொருளாக இருக்க முடியாது. ஏனென்றால் இந்த இடத்தில் ஹுத்அத்துன் என்பதன் பொருள், போருக்கான திட்டங்கள் என்பதாகும்.

எனவே இதன் பொருள் என்னவென்றால், போரில் தனது எதிரிகளை ஏதாவதொரு திட்டத்தின் காரணமாக கவனமிழக்கச் செய்து அவனை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதும் அல்லது அவனை தோல்வியுறச் செய்வதும் தடுக்கப்பட்டதல்ல.

உதாரணமாக, சரியான அறிவிப்பில் மூலம் நிரூபணம்

## திருக்குர்ஆனிலிருந்து...

நீர் கூறுவீராக: அல்லாஹ்வை விட்டுவிட்டு உங்களுக்குத் தீமையோ, நன்மையோ செய்யும் ஆற்றல் இல்லாதவற்றையா நீங்கள் வணங்குகின்றீர்கள்? அல்லாஹ்வே நன்கு கேட்பவனும் நன்கு அறிபவனுமாவான். (5:77)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

ஆகியுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு போருக்காக வெளியேறும்போது பொதுவாக தான் எங்கு செல்ல இருக்கின்றோம் என்பதை வெளிப்படுத்த மாட்டார்கள். இன்னும் சில நேரத்தில் தெற்கு நோக்கி செல்ல வேண்டியதிருக்கும். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துவக்கத்தில் வடக்கு நோக்கி செல்வார்கள். பின்னர் சுற்றி வந்து தெற்கு திசையை நோக்கி செல்வார்கள். அல்லது எவராவது ஒருவர் நீங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள் என்று கேட்டால் மதீனாவின் பெயரை கூறுவதற்கு பகரமாக மதீனாவிற்கு அருகிலுள்ள இடத்தை குறிப்பிடுவார்கள். அல்லது இதேபோன்ற வேறு ஆகுமான போர் திட்டங்களை அன்னார் மேற்கொள்வார்கள். அல்லது திருக்குர்ஆனில் சைகையாக கூறப்பட்டுள்ளதுபோன்று சில சந்தர்ப்பங்களில் சஹாபாக்கள் இவ்வாறும் செய்துள்ளார்கள். அதாவது எதிரிகளை கவனமிழக்கச் செய்வதற்காக போர் மைதானத்திலிருந்து பின்வாங்கத் துவங்கி விடுவார்கள். பின்னர் எதிரி கவனமற்றவனாக ஆகிவிடும்போதும் எதிரிகளின் படை வரிசையில் ஒழுங்கற்றத்தன்மை உருவாகி விடும்போதும் திடீரென தாக்குதல் நடத்தி வருவார்கள். இந்த அனைத்து நிலைகளும் ஹூத்அத்துன் (ஏமாற்றுதுல்) என்பதன் கீழ் வருகின்றன. இவை போர் சூழல்களில் ஆகுமானதாக ஆக்கப்பட்டுள்ளது. இப்போதும் கூட ஆகுமானதாக கருதப்படுகின்றது. ஆனால் பொய், நம்பிக்கை துரோகம் போன்றவற்றை பயன்படுத்துவதை இஸ்லாம் மிக வன்மையாக தடை செய்துள்ளது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பொதுவாக கூறி வந்துள்ளார்கள்: இஸ்லாத்தில் இறைவனுக்கு இணை வைத்தல், பெற்றோர்களின் உரிமைகளை பறித்தல் ஆகியவற்றிற்குப் பிறகு மூன்றாவது இடத்தில் பொய் பேசுவதே மாபெரும் பாவமாகும். மேலும் ஈமான் மற்றும் கோழைத்தனம் ஓரிடத்தில் ஒன்று கூட முடியும். ஆனால் ஈமான் மற்றும் பொய் ஒருபோதும் ஓரிடத்தில் ஒன்றிணைய முடியாது.

மேலும் மோசடி மற்றும் நம்பிக்கை துரோகம் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறி வந்தார்கள்: எந்த நபர் நம்பிக்கை துரோகம் செய்வாரோ அவர் கியாமத் நாளன்று இறைவனின் கடுமையான தண்டனைக்கு கீழ் வந்து விடுவார்.

சுருக்கமாக போரில் எவ்வகையான ஹூத்அத்துன் அல்லது ஏமாற்றுதலுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதென்றால் அது உண்மையில் மோசடி மற்றும் பொய் ஆகியவற்றிற்கானதல்ல. மாறாக, அதன் பொருள் போர் திட்டங்களாகும். அதாவது போரில் எதிரிகளை கவனமிழக்கச் செய்தல் அல்லது அவனைத் தோல்வியுறச் செய்ய மேற்கொள்ளப்படும் போர் திட்டங்கள் ஆகும். அது சில சூழல்களில் வெளிப்படையில் பொய் மற்றும் மோசடிக்கு ஒப்பானதாக கருதப்படக் கூடும். ஆனால் அவை உண்மையில் பொய்யாக இருப்பதில்லை.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்கள் ஒரு ஹதீஸ் ஒன்றை குறிப்பிடுகின்றார்கள். அது இதுவாகும். உம்மே குல்ஸூம் பின்த் உத்பா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: வெறும் மூன்று சந்தர்ப்பங்களில் மட்டும் உண்மையில் பொய்யாக இருக்காத கூற்றுகள் ஆனால் மக்கள் அதனை தவறுதலாக பொய்யாக கருதுவார்கள். அதுபோன்ற விஷயங்களை மூன்று சந்தர்ப்பங்களில் கூறுவதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுமதி வழங்கி இருந்தார்கள்.

முதலாவது சந்தர்ப்பம் போர் ஆகும். இரண்டாவதாக, சண்டையிட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு மத்தியில் சமாதானத்தை உருவாக்குவது. மூன்றாவதாக, கணவன் தனது மனைவியையோ, அல்லது மனைவி தனது கணவனிடமோ ஒருவர் மற்றவரை திருப்திப்படுத்த மற்றும் மகிழ்ச்சியடையச் செய்யவது ஆகிய இந்த மூன்று சந்தர்ப்பங்களில் ஆகுமானதாகும்.

எண்ணம் நல்லதாக இருக்க வேண்டும். எல்லா நிலைமையிலும் நல்ல நோக்கங்கள் நிறைவேற வேண்டும். இந்த ஹதீஸ் இவ்விவகாரத்தில் எந்த சந்தேகத்தையும் விட்டு வைக்கவில்லை. அதாவது எந்த ஏமாற்றுதலுக்கான அனுமதி போரில் வழங்கப்பட்டுள்ளதோ அது ஒருபோதும் பொய் மற்றும் மோசடிக்கான அனுமதி அல்ல. மாறாக, சில நேரங்களில் போர் திட்டங்களாக மேற்கொள்ளப்படும் காரியங்களாகும். அவை ஒவ்வொரு சமுதாயத்திலும், ஒவ்வொரு மார்க்கத்திலும் ஆகுமானதாக கருதப்பட்டுள்ளது.

கஅப் பின் அஷ்ரஃபின் சம்பவத்தை குறிப்பிட்ட பிறகு இப்னு ஹிஷாம் ஒரு அறிவிப்பை பதிவிட்டுள்ளார். அதாவது கஅப் கொலை செய்யப்பட்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இனி நீங்கள் யூதரைப் பார்த்தாலும் அவரைக் கொலை செய்து விடுங்கள் என்று கூறினார்கள். எனவே நஹீஸாஹ் என்ற பெயருடைய ஒரு சஹாபி ஒரு யூதரைக் கொலை செய்து விட்டார். இதே அறிவிப்பு அபூதாவூதிலும் இடம் பெற்றுள்ளது. இரு அறிவிப்புகள் மூலம் இப்னு இஸ்ஹாக் ஆவார்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: அறிவு மற்றும் ரிவாயத்தின் அடிப்படையில் இந்த அறிவிப்பு பலவீனமான மற்றும் நம்பிக்கையற்ற அறிவிப்பாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருபோதும் இதனை கூறவில்லை. ஏனென்றால் இப்னு ஹிஷாம் இதனை எந்தவிதமான சனதும் இன்றி இதனை எழுதியுள்ளார். எந்த சனதையும் அவர் வழங்கவில்லை.

அபூதாவூது வழங்கிய சனத் என்பது பலவீனமான மற்றும் குறைபாடுள்ள சனத் ஆகும். அந்த சனதில் இப்னு இஸ்ஹாக் அவர்கள் இவ்வாறு அறிவிக்கின்றார்கள்: நான் இந்த சம்பவத்தை ஸைது பின் சாபித் அவர்களால் விடுதலை செய்யப்பட்ட ஒரு அடிமையிடமிருந்து கேட்டேன் என்று கூறுகின்றார்கள். அந்த பெயர் தெரியாத அந்த அடிமை யார் என்பதும் தெரியவில்லை. அவரது பெயரும் குறிப்பிடப்படவில்லை. மஹீஸாஹ் பெயர் தெரியாத ஒரு பெண்ணிடமிருந்து அதைக் கேட்டுள்ளார்கள். அவருடைய பெயரும் அறிவிப்புகளிலிருந்து தெரிய வரவில்லை. அவர் யார் என்றும் தெரியவில்லை. அந்த பெண் தனது தந்தையிடமிருந்து கேட்டதாக கூறப்படுகிறது.

இப்போது இதனை ஒவ்வொரு மனிதனும் புரிந்து கொள்ள முடியும். இந்த அறிவிப்பைச் செய்யக்கூடிய இரண்டு அறிவிப்பாளர்கள் பெயர் அற்றவர்கள். சந்தேகத்திற்கிடமானவர்கள். எனவே ஒருபோதும் இந்த அறிவிப்பு ஏற்புடையதல்ல. இந்த அறிவிப்பை ஆய்வு செய்து பார்க்கும்போது கூட இந்த சம்பவம் சரியானதாக நிரூபணமாகவில்லை. ஏனென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பொதுவான வழிமுறை இந்த விஷயத்தை

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ் உங்களுக்கு அனுமதித்துள்ள நல்லவற்றை ஆகாதவையாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். மேலும் (இறைவனால் ஏற்படுத்தப்பட்ட) வரம்பை மீறாதீர்கள். வரம்பு மீறுவோரை நிச்சயமாக அல்லாஹ் நேசிப்பதில்லை. (5:88)

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

உறுதியாக பொய்ப்படுத்துகின்றது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதுபோன்று பொதுவாக கொலை செய்வதற்கு கட்டளை வழங்கினார்கள் என்பதை மறுக்கின்றது. அதுமட்டுமல்ல, அதுவொரு பொது கட்டளையாக இருந்திருந்தால் நிச்சயமாக அதன் விளைவாக பல கொலைகள் நடந்திருக்கும். ஆனால் அறிவிப்பில் ஒரு கொலை பற்றியே குறிப்பு உள்ளது. அது அக்கட்டளை பொது கட்டளையாக இருந்திக்கவில்லை என்பதை நிரூபணம் செய்கின்றது.

பின்னர் சரியான அறிவிப்புகளிலிருந்து நிரூபணம் ஆகுவது என்னவென்றால், இரண்டாம் நாளே யூதர்களுடன் ஒரு புதிய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு விட்டது. எனவே அதுபோன்ற சூழலில் ஒப்பந்தம் நிலுவையில் இருக்கின்றபோது இதுபோன்ற கட்டளை வழங்கப்பட்டது என்பது ஏற்புடையதல்ல. மேலும் ஒருவேளை அதுபோன்று ஏதாவதொரு சம்பவம் நடைபெற்றிருந்தால் யூதர்கள் அதனை பெரும் சர்ச்சையாக்கி இருப்பார்கள். ஆனால் யூதர்கள் தரப்பிலிருந்து ஒருபோதும் இதுபோன்ற புகார்கள் செய்யப்பட்டதாக வரலாற்றின் அறிவிப்புகளிலிருந்து நமக்கு வெளிப்படவில்லை.

எனவே இந்த சம்பவம் எல்லா வகையிலும் தவறாக நிரூபணமாகின்றது. அதில் ஏதாவதொரு உண்மைத்துவம் இருக்குமென்றால் அது இந்த அளவுக்கு மட்டும்தான். கஅபின் கொலைக்குப் பிறகு மதீனாவில் ஒரு பெரும் கூச்சல் ஏற்பட்டது. யூதர்கள் உணர்ச்சிவசப்பட்டனர். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யூதர்களிடமிருந்து அபாயத்தை உணர்ந்தவாறு சஹாபாக்களிடம் இவ்வாறு கூறி இருக்கலாம். எந்த யூதரிடமிருந்து உங்களுக்கு அபாயம் இருக்குமோ அந்த யூதரின் மீது தாக்குதல் நடத்தி அவரைக் கொலை செய்து விடுங்கள் என்று அன்னார் கூறி இருக்கலாம். ஆனால் இந்த நிலைமை கூட சில மணி நேரங்கள் தான் இருந்தன என்றே நமக்குத் தெரிய வருகின்றது. உண்மையில் சில மணி நேரங்கள் மட்டும் தான் அபாயகரமான சூழல் இருந்தது. ஏனென்றால், அதன் பிறகு ஒரு உடன்படிக்கை ஆகிவிட்டது. இரண்டாம் நாள் அன்றே யூதர்களுடன் அமைதிக்கான ஒரு உடன்படிக்கை புத்தம் புதிதாக உருவாக்கப்பட்டு விட்டது. கஅப் பின் அஷ்ரஃபின் கொலை தொடர்பான வரலாறு பற்றி கொஞ்சம் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

இப்னு சஅத் அவர்கள் அதனை ரபீவுல் அவ்வல் மாதம் ஹிஜ்ரி 3 ஆம் ஆண்டு நடந்ததாக குறிப்பிடுகின்றார்கள். ஆனால் இப்னு ஹிஷாம் அவர்கள், அனைவரும் ஏற்றுக் கொண்ட ஜமாதிவுல் ஆகிர் மாதத்தில் நடைபெற்ற ஸைத் பின் ஹாரிஸாவின் போருக்குப் பிறகுள்ள சம்பவமாக குறிப்பிடுகின்றார்கள்.

நான் இந்த இடத்தில் இப்னு ஹிஷாம் வரிசைக் கிரமத்தை கருத்தில் கொண்டுள்ளேன் என்று ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்கள் எழுதியுள்ளார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 466–477)

எவ்வாறிருப்பினும் இக்குறிப்பு தொடரும். இன்னும் ஒன்றிரண்டு சம்பவங்கள் உள்ளன. அது எதிர்காலத்தில் இன்ஷா அல்லாஹ் எடுத்துரைக்கப்படும்.

*(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)*

அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கு அவர்கள் அல்லாஹ்வை நினைவு கூருவதில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

நான் உங்களிடம் அறிவுறுத்திக் கூறுகின்றேன். அதாவது ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தின்போதும், இடைவெளியிலும், அதேபோன்று இரவு நேரத்திலும் அல்லாஹ்வை நினைவு கூருங்கள். மேலும் தொழுகையை நிறைவேற்றுங்கள். இந்த துஆவை செய்து வாருங்கள். அதாவது உனது குறிப்பான உதவி, அறிவு மற்றும் நல்ல எண்ணத்துடன் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த ஆண்டு மாநாட்டில் நாங்கள் கலந்து கொள்கின்றோம். நாங்கள் இந்த ஆண்டு மாநாட்டில் உனது திருப்தி மற்றும உன்னை நினைவு கூர்வதை அதிகப்படுத்திக் கொள்வதற்காக கலந்து கொண்டுள்ளோம். அதன் மூலம் உனது நெருக்கம் எங்களுக்கு கிடைக்க வேண்டும். இந்த ஆண்டு மாநாட்டிற்காக நீ வைத்துள்ள அனைத்து பரக்கத்துகளையும் எங்களுக்கு தந்தருள்வாயாக. மேலும் நீ எங்களிடத்தில் விரும்புகின்ற அந்த தூய மாற்றத்தை எங்களிடத்தில் ஏற்படுத்துவாயாக. மேலும் நாங்கள் உண்மையான உள்ளத்துடன் அவரிடம் பைஅத் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் நீ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப்பேரன்பை இந்த உலகத்தில் அனுப்பியுள்ளாய்.

இறுதியில் நினைவில் கொள்ளுங்கள். ஒவ்வொரு அஹ்மதியின் முகத்திற்குப் பின்னால் அஹ்மதிய்யத்தின் முகம் இருக்கின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முகம் இருக்கின்றது. மேலும் இஸ்லாத்தின் முகம் இருக்கின்றது. இதை விரும்புவதும், இதை பாதுகாப்பதும் ஒவ்வொரு அஹ்மதியின் மீதும் கடமையாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனைகளின்படி செயல்படக்கூடிய நற்பாக்கியத்தை இறைவன் உங்களுக்கு வழங்குவானாக. மேலும் அல்லாஹ்வின் அருளால் உங்களது ஆண்டு மாநாடு வெற்றிக்குரியதாக அமையட்டுமாக. மேலும் பைஅத்தின் உடன்படிக்கையை முழுமை செய்வதற்கான நற்பாக்கியத்தையும் அல்லாஹ் உங்களுக்கு வழங்குவானாக.

உங்கள் அனைவரையும் அஹ்மதிய்யா கிலாஃபத்தின் மீது உண்மையான பற்றுணர்வை வைத்திருப்பவர்களாக அல்லாஹ் ஆக்குவானாக. மேலும் உங்களது வாழ்க்கையில் உண்மையான மாற்றத்தை அல்லாஹ் ஏற்படுத்துவானாக. அதன் மூலம் உண்மை, நேர்மை மற்றும் இஸ்லாம் மற்றும் மனித இனத்திற்கு தொண்டாற்றுவதற்கு நீங்கள் எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டும். அல்லாஹ் உங்கள் அனைவரின் மீதும் தனது அருளைப் பொழிவானாக. ஆமீன்

வஸ்ஸலாம் எளியவன்
(மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது)
ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அல்ஃபஸல் இன்டர்நேஷனல் பத்திரிக்கை 01 அக்டோபர் 2019)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டவர்களே! போதைப் பொருள்கள், சூதாட்டம், சிலை (வழிபாடு)கள், குறி பார்க்கும் அம்புகள் ஆகியன அருவருக்கத் தக்க(தும்) ஷைத்தானின் செயலுமேயாகும். எனவே நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு, அவற்றிலிருந்து (முற்றிலும்) விலகிக் கொள்ளுங்கள். (5:91)

M.Y. Shahul Hameed, Melapalayam

**உங்களது முன்மாதிரியை சிறந்ததாக ஆக்குங்கள். பெயரளவில் அஹ்மதி என்று கூறுவது மட்டும் போதுமானது கிடையாது. உங்களிடத்தில் இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். இறையச்சம் என்பது பெயரளவில் மட்டுமல்லாமல் நற்செயல்களின் மூலமாக அது வெளிப்படுகிறது**

**நாம் தொழுகைகளை நிலைநாட்டக் கூடியவர்களாக இருக்கின்றபோதுதான் இறைவணக்கத்தின் உரிமையை நம்மால் செலுத்த முடியும். ஒவ்வொரு அஹ்மதியும் தொழுகைகளை பாதுகாப்பதன் பக்கம் குறிப்பான கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்**

**ங்கள் தொழுகைகளை நிலைநாட்டக் கூடியவர்களாக ஆகி விட்டால், மேலும் உங்களது பிள்ளைகளையும் தொழுகையில் நிலைத்திருப்பவர்களாக ஆக்கிவிட்டால் பிறகு உங்களது அனைத்து தர்பிய்யத் பிரச்சனைகளும் தானாகவே சரியாகி விடும்**

## 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21–23 ஆகிய தேதிகளில் இத்தாலியில் நடைபெற்ற 13 வது ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தின்போது சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் வழங்கிய தூதுச் செய்தி

بسم اللہ الرحمٰن الرحیم

نحمدہ و نصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود

خدا کے فضل اور رحم کے ساتھ

ھو النّاصر

அன்பிற்குரிய இத்தாலி அஹ்மதிய்யா ஜமாஅத் உறுப்பினர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹு

இத்தாலி அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு தனது ஆண்டு மாநாட்டை நடத்தவதற்கான நற்பாக்கியம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அல்லாஹ் உங்களது இந்த மாநாட்டை எல்லா வகையிலும் வெற்றிக்குரியதாக ஆக்குவானாக. மேலும் அதன் ஆன்மீக அருட்களிலிருந்து முழுமையாக பயன் பெறுவதற்கான நற்பாக்கியத்தை உங்களுக்கு வழங்குவானாக. நினைவில் கொள்ளுங்கள். இந்த மாநாடு மார்க்க இஜ்திமாவாகும். இதில் கலந்து கொள்ளக் கூடியவர்கள் இறைவனை நினைவு கூர்வது, இறைவனைப் புகழ்வது ஆகியவற்றின் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும். தற்போதுதான் அருளுக்குரிய ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பதற்கும், இறை வணக்கங்களை செய்வதற்கும் உங்களுக்கு நற்பாக்கியம் கிடைத்தது.

உங்களுக்கு எனது தூதுச் செய்தி என்னவென்றால், ரமலானில் செய்யப்பட்ட இறைவணக்கங்கள் மற்றும் தூய மாற்றங்களை உங்களது வருங்கால வாழ்க்கையின் நிரந்த அங்கமாக ஆக்குங்கள். உங்களது முன்மாதிரியை சிறந்ததாக ஆக்குங்கள். பெயரளவில் அஹ்மதி என்று கூறுவது மட்டும் போதுமானது கிடையாது. உங்களிடத்தில் இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். இறையச்சம் என்பது பெயரளவில் மட்டுமல்லாமல் நற்செயல்களின் மூலமாக அது வெளிப்படுகிறது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அல்லாஹ் எந்த விஷயத்திற்காக என்னை அனுப்பியுள்ளான் என்றால் அது இறையச்சத்தின் மைதானமானது காலியாக இருக்கின்றது. இறையச்சத்தை மேற்கொள்ள வேண்டும்.... நீங்கள் இறையச்சத்தை மேற்கொள்பவர்களாக இருப்பீர்கள் என்றால் பிறகு முழு உலகமும் உங்களுடன் இருக்கும். எனவே இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். எவர்கள் மது அருந்துகின்றார்களோ அல்லது எவர்களது மார்க்கத்தில் மது அருந்துவதை புனிதமான ஒரு பகுதியாக கருதப்படுகிறதோ அவர்களுக்கு இறையச்சத்துடன் எவ்வித தொடர்பும் ஏற்பட முடியாது. அவர்கள் நன்மையுடன் போர் செய்கின்றனர். எனவே தீமையை எதிர்த்து போர் செய்யக்கூடிய, இறையச்சத்திலும், தூய்மையிலும் முன்னேற்றமடையக்கூடிய நற்பேறு பெற்ற மக்களை அல்லாஹ் நமது ஜமாஅத்திற்கு வழங்குவானாக. இதுவே மாபெரும் வெற்றியாகும். இதைவிட வேறு எந்தவொரு விஷயமும் தாக்கத்தை ஏற்படுத்த முடியாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 645 – 2003 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

பிறகு தொழுகையாகும். இதைப் பேணுவதும் மிகவும் அவசியமாகும். இதைப் பற்றி நான் மீண்டும் மீண்டும் கவனமூட்டிக் கொண்டிருக்கின்றேன். நாம் தொழுகைகளை நிலைநாட்டக் கூடியவர்களாக இருக்கின்றபோதுதான் இறைவணக்கத்தின் உரிமையை நம்மால் செலுத்த முடியும். ஒவ்வொரு அஹ்மதியும் தொழுகைகளை பாதுகாப்பதன் பக்கம் குறிப்பான கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

எவர்கள் பாவங்களால் நிரம்பி இருப்பார்களோ அவர்கள் இறைஞானம் மற்றும் இறை நெருக்கத்திலிருந்து தொலை தூரத்தில் இருக்கின்றனர். இதை தூய்மைப்படுத்துவதற்கும், தொலை தூரத்திலிருந்து (இறைவனுக்கு) அருகில் வரச் செய்வதற்கும் தொழுகை இருக்கின்றது. இதன் மூலமாக இந்தத் தீமைகளை அகற்ற முடியும். மேலும் இதனால் தூய்மையான எண்ணங்கள் நிரப்பப்படுகின்றது. இதனால்தான் தொழுகையானது தீமைகளை அகற்றக்கூடியதாக இருக்கின்றது என்று கூறப்பட்டுள்ளது.

(மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 93 – 2003 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

எனவே நீங்களும் தொழுகையை நிலைநாட்டுங்கள். உங்களது பிள்ளைகளையும் தொழுகையில் நிலைத்திருக்கச் செய்யுங்கள். எப்போது வரை நீங்கள் தொழுகைகளை பேண மாட்டீர்களோ, மேலும் உங்களது செயல் முன்மாதிரியை வெளிப்படுத்த மாட்டீர்களோ அப்போது வரை உங்களது பிள்ளைகளும் தொழுகையில் நிலைத்திருக்க மாட்டார்கள். நீங்கள் தொழுகைகளை நிலைநாட்டக் கூடியவர்களாக ஆகி விட்டால், மேலும் உங்களது பிள்ளைகளையும் தொழுகையில் நிலைத்திருப்பவர்களாக ஆக்கிவிட்டால் பிறகு உங்களது அனைத்து தர்பிய்யத் பிரச்சனைகளும் தானாகவே சரியாகி விடும். ஆன்மாவை சீர்திருத்தம் செய்வது என்பது தொடர்ச்சியாக செய்யப்பட்டு வர வேண்டிய ஒரு ஜிஹாது ஆகும். எப்போதும் தம்மைத்தாமே ஆய்வு செய்து வர வேண்டும். அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் உங்களிடத்தில் தூய மாற்றங்களை உருவாக்கிக் கொள்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்களுக்கு உங்களை வாரிசாக்குவானாக. மேலும் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கக் கூடியவர்களாக உங்களை ஆக்குவானாக. ஆமீன்

வஸ்ஸலாம் எளியவன்

(மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது)

ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அல்ஃபஸல் இன்டர்நேஷனல் பத்திரிக்கை 20 செப்டம்பர் 2019)

**பெண்கள் அமைப்பின் அனைத்து பணிகளும் காலத்தின் கலீஃபாவினால் தயார் செய்யப்பட்ட திட்டத்திற்கேற்பவும், அதனை முன்னேற்றத்தின் பக்கம் கொண்டு செல்வதற்காகவும் இருக்க வேண்டும். ஜமாஅத்தின் ஒற்றுமைக்காக மார்க்க போதனைக்கேற்ப எல்லா தியாகங்களும் செய்வதற்கு தயாராக இருக்க வேண்டும். நல்லொழுக்கம் மற்றும் ஆன்மீகத்தின் சீர்திருத்தம் மற்றும் அதனை அடைவதற்கான வழிகளைப் பற்றி சிந்திக்க வேண்டும். குழந்தைகளின் தர்பிய்யத்தின் மீது தனது பொறுப்புகளை குறிப்பாக புரிந்து கொள்ள வேண்டும். அதாவது அவர்களது மார்க்க விஷயங்கள் செயல் துடிப்பாக இருக்க வேண்டும். மேலும் அவர்கள் கஷ்டங்களை பொறுத்துக் கொள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டும். மார்க்க விவகாரங்களை தெரிந்திருக்க வேண்டும். அவர்களிடம் இறைவன், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் கலீஃபாக்கள் மீது அன்பையும், கட்டுப்பட்டு நடக்கும் உணர்வையும் ஏற்படுத்த வேண்டும். வாழ்கையை அர்ப்பணிப்பதற்கான ஆர்வத்தை அவர்களிடம் ஏற்படுத்த வேண்டும். அமைப்புகளின் உறுப்பினர்கள் ஒருவர் மற்றொருவரின் உதவியுடன் பணி செய்ய வேண்டும். மேலும் மற்றவர்களின் தவறுகளை மூடி மறையுங்கள். பொறுமை மற்றும் தைரியத்தின் பண்புகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்**

## லஜ்னா இமாயில்லாஹ் ஹாலந்தின் 50 வது ஆண்டு கோல்டன் ஜூப்ளியின் சந்தர்ப்பத்தின்போது கதீஜா பத்திரிகையின் சிறப்பிதழிற்காக சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் வழங்கிய தூதுச் செய்தி

بسم اللہ الرحمٰن الرحیم

نحمدہ ونصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود

خدا کے فضل اور رحم کے ساتھ

ھو الناصر

அன்பிற்குரிய ஹாலந்து மஜ்லிஸின் லஜ்னா இமாயில்லாஹ் உறுப்பினர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹு

ஹாலந்து லஜ்னா இமாயில்லாஹ் நிறுவப்பட்டு ஐம்பது ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி கோல்டன் ஜூப்ளியை கொண்டாடுகின்றது. எனவே இந்த சந்தர்ப்பத்தில் கதீஜா பத்திரிகையின் சிறப்பிதழை வெளியிட விரும்புவதாகவும் அறிந்து எனக்கு மிக்க மகிழ்ச்சி. அல்லாஹ் இதனை எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக. ஆமீன்

மதிப்பிற்குரிய சத்ர் சாஹிபா லஜ்னா இமாயில்லாஹ் அவர்கள் இந்த சந்தர்ப்பத்தில் என்னிடம் தூதுச் செய்தியை அனுப்புமாறு கேட்டுக் கொண்டுள்ளார்கள். எனது தூதுச் செய்தி என்னவென்றால், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எந்த நோக்கத்திற்காக இந்த அமைப்பை நிறுவினார்களோ அதனை உங்களது செயல், உங்களது நல்லொழுக்கம் மற்றும் ஆன்மீக முன்னேற்றத்தைப் பெறுவதில் உங்கள் கண்முன் நிறுத்துங்கள். மேலும் அதனை கிலாஃபத்துடன் வலுவான தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்காக பயன்படுத்துங்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் 25 டிசம்பர் 1922 ஆம் ஆண்டு லஜ்னா இமாயில்லாஹ் அமைப்பை நிறுவினார்கள். அன்னார் ஒரு கட்டுரையை எழுதினார்கள். அதில் காதியானைச் சார்ந்த கீழ்க்கண்ட விஷயங்களை ஏற்றுக் கொள்ளக்கூடிய அஹ்மதி பெண்களுக்கு அழைப்பு விடுத்தார்கள். அதன் மூலம் அந்த நோக்கத்தை அடைவதற்காக ஒன்றான இணைந்து பணி செய்வதை துவங்க வேண்டும்.

அன்னாரது முதன்மையான நோக்கம் என்னவென்றால், பெண்கள் தமது மற்ற பெண்களின் அறிவை அதிகரிக்கச் செய்ய வேண்டும். அவர்களுக்கென்று சட்ட திட்டங்கள் அடங்கிய அமைப்பு இருக்க வேண்டும். அவர்கள் கூட்டங்களில் இஸ்லாமிய பிரச்சனைகள் தொடர்பாக தான் எழுதிய கட்டுரையை படிக்க வேண்டும். இஸ்லாத்தைப் பற்றி அறிந்திருப்பவர்களிடம் சொற்பொழிவு நிகழ்த்த வேண்டும். பெண்கள் அமைப்பின் அனைத்து பணிகளும் காலத்தின் கலீஃபாவினால் தயார் செய்யப்பட்ட திட்டத்திற்கேற்பவும், அதனை முன்னேற்றத்தின் பக்கம் கொண்டு செல்வதற்காகவும் இருக்க வேண்டும். ஜமாஅத்தின் ஒற்றுமைக்காக மார்க்க போதனைக்கேற்ப எல்லா தியாகங்களும் செய்வதற்கு தயாராக இருக்க வேண்டும். நல்லொழுக்கம் மற்றும் ஆன்மீகத்தின் சீர்திருத்தம் மற்றும் அதனை அடைவதற்கான வழிகளைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

குழந்தைகளின் தர்பிய்யத்தின் மீது தனது பொறுப்புகளை குறிப்பாக புரிந்து கொள்ள வேண்டும். அதாவது அவர்களது மார்க்க விஷயங்கள் செயல் துடிப்பாக இருக்க வேண்டும். மேலும் அவர்கள் கஷ்டங்களை பொறுத்துக் கொள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டும். மார்க்க விவகாரங்களை தெரிந்திருக்க வேண்டும். அவர்களிடம் இறைவன், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் கலீஃபாக்கள் மீது அன்பையும், கட்டுப்பட்டு நடக்கும் உணர்வையும் ஏற்படுத்த வேண்டும். வாழ்கையை அர்ப்பணிப்பதற்கான ஆர்வத்தை அவர்களிடம் ஏற்படுத்த வேண்டும்.

அமைப்புகளின் உறுப்பினர்கள் ஒருவர் மற்றொருவரின் உதவியுடன் பணி செய்ய வேண்டும். மேலும் மற்றவர்களின் தவறுகளை மூடி மறையுங்கள். பொறுமை மற்றும் தைரியத்தின் பண்புகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். மற்ற பெண்களுக்கும் ஒரு படிப்பினையாக இருக்கும் பொருட்டு மக்களின் ஏளனத்தையும், எள்ளி நகையாடலையும் தைரியத்துடனும், வீரத்துடனும் எதிர்கொள்வதற்கான தன்மையை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

இந்த நோக்கத்திற்காக மற்ற பெண்களையும் தமது கருத்தை உடையவர்களாக ஆக்குங்கள். ஜமாஅத் ஒரு குறிப்பான கூட்டத்திற்கான பெயர் அல்ல. சிறியவர், பெரியவர், ஏழை, செல்வந்தர் ஆகிய அனைவரது பெயர்தான் ஜமாஅத் ஆகும். ஒருவர் மற்றொருவருடனான அன்பை உருவாக்கிக் கொள்ள முயற்சி செய்யுங்கள். அனைத்து உதவிகளும், வெற்றிகளும் அல்லாஹ்விடமிருந்தே வருகின்றது. எனவே அவன் நமது படைப்பின் நோக்கமாக வைத்துள்ள நோக்கம் பூர்த்தி ஆகுவதற்காக துஆ செய்யுங்கள்.

ஹஸ்ரத் உம்முல் முஃமினீன் (ரலி) அவர்களின் வீட்டில் ஹுஸூர் அவர்களின் கூற்றிற்கேற்ப ஒன்று கூடியிருந்த 13 பெண்கள் இதன் அடிப்படையில் கையெழுத்திட்டனர். அன்னார் அவர்களிடம் சொற்பொழிவாற்றினார்கள். அத்துடன் லஜ்னா இமாயில்லாஹ்விற்கான அமைப்பை நிறுவினார்கள்.

ஹுஸூர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் ஐம்பது சதவிகிதம் பெண்களை சீர்திருத்தம் செய்து விட்டால் பிறகு இஸ்லாத்திற்கு முன்னேற்றம் கிடைத்து விடும்.

எனவே அன்னார் லஜ்னா இமாயில்லாஹ்வின் தர்பிய்யத் மற்றும் அமைப்பு தொடர்பாக அதிகமாக கவனம் செலுத்தி வந்தார்கள். ஆக லஜ்னா இமாயில்லாஹ் நிறுவப்பட்டதற்கான இந்த நோக்கத்தை எப்போதும் கருத்தில் கொள்ளுங்கள். இதற்கு காலத்தின் கலீஃபாவிடம் துஆவிற்காகவும், வழிகாட்டல் பெறுவதும் மிகவும் அவசியமாகும். நீங்கள் இந்த அடிப்படையான விஷயத்தை கருத்தில் கொள்வீர்கள் என்றால் பிறகு உங்களது அனைத்து நிகழ்ச்சிகளும், அனைத்து திட்டங்களும் வெற்றி பெறும். உங்களது ஒவ்வொரு அடியும் முன்னேற்றத்தின் பக்கம் இருக்கும். இன்ஷா அல்லாஹ். அல்லாஹ் உங்களுக்கு அதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. ஆமீன்

வஸ்ஸலாம் எளியவன்

(மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது)

ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அல்ஃபஸல் இன்டர்நேஷனல் பத்திரிக்கை 27 செப்டம்பர் 2019)

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 12 March 2020 Issue No. 11

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

**நினைவில் கொள்ளுங்கள். ஒவ்வொரு அஹ்மதியின் முகத்திற்குப் பின்னால் அஹ்மதிய்யத்தின் முகம் இருக்கின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முகம் இருக்கின்றது. மேலும் இஸ்லாத்தின் முகம் இருக்கின்றது**

**ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்கின்ற ஒவ்வொருவரும் அல்லாஹ்வின் திருப்தியை பெற முயற்சி செய்வார் என்ற விஷயத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த மூன்று நாட்களும் உலகத்தின் மீதான அன்பு உங்களது உள்ளத்தில் எவ்வித இடத்தையும் பெறக்கூடாது. மாறாக, ஆண்டு மாநாட்டின் நற்தாக்கங்களிலிருந்து பயன் பெற வேண்டும். அல்லாஹ்வை நினைவு கூர்வதில் மூழ்கியிருங்கள். மேலும் உங்களது ஆன்மீக மற்றும் நல்லொழுக்க நிலைமைகளை சரி செய்ய முயற்சி செய்யுங்கள்**

**நான் உங்களிடம் அறிவுறுத்திக் கூறுகின்றேன். அதாவது ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தின்போதும், இடைவெளியிலும், அதேபோன்று இரவு நேரத்திலும் அல்லாஹ்வை நினைவு கூருங்கள். மேலும் தொழுகையை நிறைவேற்றுங்கள். இந்த துஆவை செய்து வாருங்கள் அதாவது உனது குறிப்பான உதவி, அறிவு மற்றும் நல்ல எண்ணத்துடன் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த ஆண்டு மாநாட்டில் நாங்கள் கலந்து கொள்கின்றோம். நாங்கள் இந்த ஆண்டு மாநாட்டில் உனது திருப்தி மற்றும உன்னை நினைவு கூர்வதை அதிகப்படுத்திக் கொள்வதற்காக கலந்து கொண்டுள்ளோம். அதன் மூலம் உனது நெருக்கம் எங்களுக்கு கிடைக்க வேண்டும். இந்த ஆண்டு மாநாட்டிற்காக நீ வைத்துள்ள அனைத்து பரக்கத்துகளையும் எங்களுக்கு தந்தருள்வாயாக. மேலும் நீ எங்களிடத்தில் விரும்புகின்ற அந்த தூய மாற்றத்தை எங்களிடத்தில் ஏற்படுத்துவாயாக**

## 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13–15 ஆகிய தேதிகளில் மலேஷியாவில் நடைபெற்ற 34 வது ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தின்போது சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் வழங்கிய தூதுச் செய்தி

بسم اللہ الرحمٰن الرحیم

نحمدہ ونصلی علیٰ رسولہ الکریم وعلیٰ عبدہ المسیح الموعود

خدا کے فضل اور رحم کے ساتھ

ھوالنّاصر

அன்பிற்குரிய மலேஷியா அஹ்மதிய்யா ஜமாஅத் உறுப்பினர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹூ

நீங்கள் 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 13,14,15 ஆகிய தேதிகளில் 34 வது ஆண்டு மாநாட்டைக் நடத்த இருக்கின்றீர்கள் என்பதை அறிந்து எனக்கு மிக்க மகிழ்ச்சி. அல்லாஹ் இந்த மாநாட்டிற்கும் பெரும் வெற்றியை வழங்குவானாக. மேலும் கலந்து கொள்ளக் கூடியவர்கள் ஆன்மீக அருட்களை பெறுவதுடன் நன்மையிலும் முன்னேற்றமடையச் செய்து கொண்டே இருப்பானாக என்று துஆ செய்கின்றேன்.

நான் ஜெர்மனி ஆண்டு மாநாட்டில் கூறியது போன்று, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பற்றுணர்வுடன் தொடர்பை வைத்திருப்போம் என்ற நாம் செய்த உடன்படிக்கையின் அடிப்படையில் எந்த அருளையும், கருணையும் நாம் பெற்றுள்ளோமோ அதில் ஒன்று ஆண்டு மாநாடு ஆகும். இது நமது ஆன்மீக, நல்லொழுக்க மற்றும் சிந்தனைகளில் ஒளியூட்டக் கூடியதாக இருக்கின்றது. மேலும் அல்லாஹ்வின் நெருக்கத்தை அடைவதற்கான மிகச்சிறந்த வழியாக இருக்கின்றது. மேலும் நமது உள்ளத்தை தூய்மைப்படுத்துவற்கும் உதவி செய்கின்றது.

இதன் மூலம் நமது பொறுப்புகளை மற்றவர்களுக்காக பூர்த்தி செய்வதற்காக நம்மை தகுதியுள்ளவர்களாக ஆக்க வேண்டும். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எந்த நோக்கத்திற்காக ஆண்டு மாநாட்டை வைத்துள்ளார்களோ அதன் நோக்கத்தை பெறக் கூடியவர்களாக இருக்க வேண்டும். எனவே ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்கின்ற ஒவ்வொருவரும் அல்லாஹ்வின் திருப்தியை பெற முயற்சி செய்வார் என்ற விஷயத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த மூன்று நாட்களும் உலகத்தின் மீதான அன்பு உங்களது உள்ளத்தில் எவ்வித இடத்தையும் பெறக்கூடாது. மாறாக, ஆண்டு மாநாட்டின் நற்தாக்கங்களிலிருந்து பயன் பெற வேண்டும். அல்லாஹ்வை நினைவு கூர்வதில் மூழ்கியிருங்கள். மேலும் உங்களது ஆன்மீக மற்றும் நல்லொழுக்க நிலைமைகளை சரி செய்ய முயற்சி செய்யுங்கள். உங்களது முறையீடுகளையும், ஒருவர் மற்றொருவருடனான தொடர்பின்மையை முறித்துக் கொள்ள வேண்டும். மேலும் தேவையற்ற மற்றும் வீணான பேச்சுக்களை விட்டு விட வேண்டும்.

நினைவில் கொள்ளுங்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்த பைஅத் உடன்படிக்கை, அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீதான அன்பு உலக அன்பை விட உங்களது உள்ளத்தில் அதிகமாக இல்லை என்றால், மேலும் உங்களது வாழ்க்கையை அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கேற்பவும், கட்டளைகளுக்கேற்பவும் கழிக்கவில்லை என்றால் பிறகு ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வது வீணானதாகும்.

ஒரு நபர் அல்லாஹ்வுடன் உண்மையான அன்புடன் சரியான தொடர்பை வைத்துக் கொள்வார் என்றால், மேலும் தன்னைப் படைத்த உண்மையான இறைவனை எந்நிலையிலும் மறக்கவில்லை என்றால் பிறகு அல்லாஹ்வும் அவனை விட்டு விட மாட்டான். இதைத்தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மிடம் எதிர்பார்க்கின்றார்கள். நாம் இந்த நிலைமையை அடைவதற்கு நம்மில் ஒவ்வொருவரும் முயற்சியும் துஆவும் செய்ய வேண்டும். நாம் அவ்வாறு செய்வோமென்றால் பிறகு அல்லாஹ்வும் நம்மை நினைவு கூர்வான்.

அவன் கூறுகின்றான்: அல்லாஹ்வை நினைவு கூருங்கள். அவனும் உங்களை நினைவு கூர்வான். எவரை அல்லாஹ் நினைவில் வைத்திருப்பானோ அவர்கள் நற்பேறு பெற்றவர்கள் ஆவர். மேலும் அவன் அவர்கள் மீது எண்ணற்ற அருட்கொடைகளை பொழிகின்றான். ஏனென்றால் அவன் தனது அன்றாடப் பணிகளுக்கு மத்தியிலும் இறைவனை மறப்பதில்லை. எனவே எந்த விருந்தினர்களாயினும் சரி மேலும் மாநாட்டில் கலந்து கொண்டு பணி செய்யக்கூடிய உறுப்பினர்களாக இருந்தாலும் சரி அவர்கள்

*(தொடர்ச்சி 9வது கடைசிப் பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad